# விடை தேடும் வினாக்கள்



வில்லியின் வேர்ப்பலா

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 8. வில்லியின் வேர்ப்பலா

பெருங்காப்பியங்களில் பாத்திரப்படைப்பு என்பது எளிய செயல் அன்று. கவிஞனின் பேராற்றலை அளவிட்டு உரைக்கும் கட்டளைக்கல் அவன் படைத்த பாத்திரம். ஒரு மண்பாண்டத்தை எங்கே தட்டினாலும், மாறுபடாத ஒரே ஓசை வருவதுபோல், தான் படைத்த பாத்திரங்களில் அவற்றின் இயல்பு மாறாது நினைவோடு அவற்றை நடத்திச்செல்லுதல் அரிய செயலாகும். தனது காப்பியப் பாத்திரங்களைத் தன் அளவற்ற கற்பனை ஆற்றலால் ஆட்டிப் படைக்கும் கவிஞன், அவற்றின் வாயிலாகக் கற்போராகிய நம்மையும் ஆட்டிப்படைத்து ஆட்சிச் செய்கின்றான். வரலாறோ கற்பனையோ, உண்மையோ பொய்யோ அவன் படைத்த பாத்திரங்கள் சிரித்தால் நாம் சிரிக்கிறோம்; அழுதால், நாம் அழுகிறோம். அவை துன்புறும் போது துவள்கிறோம். அவற்றின் இன்பத்தில் நாமும் இறும்பூது கொள்கின்றோம். அவன் படைத்த பாத்திரங்களோடு சேர்ந்து பலநூறு ஆண்டுகள் அவனும் வாழ்கிறான்; அவற்றையும் வாழ்விக்கிறான்.

உலகப் பெருங்காப்பியங்களின் கதைக்கரு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனாலும், அவற்றிடையே இழையோடும் பொதுப்பண்புகள் சில உண்டு. நன்மைக்கும்

www.saivamonline.com

தீமைக்கும் நடக்கும் போராட்டமாகவோ, அறத்திற்கும் மறத்திற்கும் ஏற்பட்ட மோதலாகவோ, உண்மைக்கும் பொய்க்கும் இடையில் தோன்றிய மோதலாகவோ, பாவத்திற்கும் புண்ணியத்திற்கும் இடைநிகழ்ந்த போராட்டமாகவோதான் அவை அமையும். இத்தகு காப்பியங்களைப் படைக்கும் கவிஞன் நல்லறத்தை நிலைநாட்ட உயர்குணப்பாத்திரங்களை உருவாக்குகின்றான். அதர்மத்தின் வீழ்ச்சியைச் சித்திரிக்க எதிர்முனைப் பாத்திரங்களைப் படைத்தளிக்கின்றான். கதைப்பின்னலில் அவன் பாத்திரங்கள், நேர்மாறான குணம் படைத்தனவாக அமைந்தாலும், இரண்டும் அவன் படைத்தனவே என்பதை மறத்தல் கூடாது.

---

**பெருங்காப்பியங்களில் பாத்திரப்படைப்பு என்பது எளிய செயல் அன்று. கவிஞனின் பேராற்றலை அளவிட்டு உரைக்கும் கட்டளைக்கல் அவன் படைத்த பாத்திரம். ஒரு மண்பாண்டத்தை எங்கே தட்டினாலும், மாறுபடாத ஒரே ஓசை வருவதுபோல், தான் படைத்த பாத்திரங்களில் அவற்றின் இயல்பு மாறாது நினைவோடு அவற்றை நடத்திச் செல்லுதல் அரிய செயலாகும். தனது காப்பியப் பாத்திரங்களைத் தன் அளவற்ற கற்பனையாற்றலால் ஆட்டிப் படைக்கும் கவிஞன், அவற்றின் வாயிலாகக் கற்போராகிய நம்மையும் ஆட்டிப்படைத்து ஆட்சி செய்கின்றான்.**

---

தமிழில், பெருங்காப்பியம் படைத்த கவிஞர்கள், பாத்திரப் படைப்பில் பெரு வெற்றி பெற்றவர்கள். அறநெறிப்பாத்திரங்களைப் படைத்து நம் அகம் கவர்ந்த அவர்கள், மேலும் ஒரு படிபோய், தமது பாத்திரங்களைக் கைகூப்பித் தொழும் கடவுளர்களாகவும் ஆக்கிக்காட்டிய ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். ஒரு கண்ணகியைக் கடவுளாக



www.saivamonline.com

உயர்த்தியும், கானல்கரை மலர் ஒன்றைக் கற்பரசியாகப் படைத்தும் காட்டிய இளங்கோவடிகள் நம் நெஞ்சில் வருகிறார். நூறு முறை பேசிய சீதையை நெஞ்சில் நிறுத்திப் பெற்ற வெற்றியை, ஒரே பேச்சுப்பேசிய, சுமித்திரையைச் சித்திரித்ததிலும் கவிச்சக்ரவர்த்தியால் பெற்றுவிட முடிகிறது. ஓர் இராமபிரான் வெற்றிக்காக நம்மை ஏங்க வைத்த கம்பனுக்கு, ஒரு கும்பகருணனின் மறைவுக்காக நம்மைக் கலங்க வைக்கவும் தெரிந்திருக்கிறது. அமரகவி பாரதி கூறியது போல், ஒரு கல்லைப்பிளந்து கால் வைத்து ஏறும் படியாகவும் கவிஞன் செய்வான்; ஒரு பாதியைக் கைகூப்பி வணங்கும் கடவுளாகவும் அவன் இயற்றுவான்.

---

**உலகப் பெருங்காப்பியங்களின் கதைக்கரு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனாலும், அவற்றிடையே இழையோடும், பொதுப்பண்புகள் சில உண்டு. நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டமாகவோ, அறத்திற்கும் மறத்திற்கும் ஏற்பட்ட மோதல்களாகவோ, உண்மைக்கும் பொய்க்கும் இடையில் தோன்றிய மோதலாகவோ, பாவத்திற்கும் புண்ணியத்திற்கும் இடைநிகழ்ந்த போராட்டமாகவோதான் அவை அமையும்.**

---

பாத்திரப்படைப்பில் பெருவெற்றி பெற்ற தமிழ்க் கவிஞர்கள், தாங்கள் தேர்ந்து கொண்ட கதைக்கரு காரணமாக எதிர்கொண்ட இடர்ப்பாடுகள் பல, இங்கே, பெருங்காப்பியங்கள் பலவற்றிலும் கடவுள் வருகை தவிர்க்க இயலாத கதைப் போக்காக அமைந்து விட்டது. இறைமை உணர்வைக் குருதியில் தேக்கிய தமிழ் மக்களுக்கு வழங்கும் காப்பியங்களில், கடவுளர்கள் பாத்திரங்களாக வந்தபோது, அவற்றின் குறைகளையும் குறித்துக்காட்டத் தமிழ்க் கவிஞர்கள் கொண்ட தயக்கம் பெரிது. ஒரு தவற்றைத் தவறு என்று சுட்டிக்காட்ட இயலாது போனது கூட வியப்பில்லை. அதனை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயமும் இங்கே கவிஞர்களுக்கு வந்து சேர்ந்தது.



www.saivamonline.com

கடவுளர் பாத்திரங்களுக்கு, நியாயம் கற்பித்த கவிஞர்கள், அவர்களை எதிர்த்து நின்ற எதிர்முனைப் பாத்திரங்களிடம் நேர்மை காணப்பட்டபோதும், ஏனோ அவற்றைத் தனியாக எடுத்துக்காட்டி ஒளியூட்டத்தயக்கமே காட்டினர். இறைமை சார்ந்த கதைப் பின்னலில் இவை தவிர்க்க இயலாத அறச்சிகலாகவே கவிஞர்களுக்கு அமைந்து விடுகின்றன.

கதை நடத்தும் கவிஞன், பாத்திரங்களின் செயற்பாடுகளின் மேல் தான் ஒரு விமரிசகனாக நின்று தன் உணர்வை வெளிப்படுத்துவது சிறந்த கலை வடிவம் ஆகாது. ஏதேனும் ஒரு பாத்திரத்தின் செயற்பாட்டின் மேல் கவிஞனுக்கு ஒரு கருத்திருக்குமானால், அதனைக் காப்பியத்தில் வரும் ஏதேனும் உரிய ஒரு பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்த அவன்

---

**தமிழில், பெருங்காப்பியம் படைத்த கவிஞர்கள் பாத்திரப் படைப்பில் பெரு வெற்றி பெற்றவர்கள். அறநெறிப் பாத்திரங்களைப் படைத்து நம் அகம் கவர்ந்த அவர்கள், மேலும் ஒரு படிபோய் தமது பாத்திரங்களைக் கைகூப்பித் தொழும் கடவுளர்களாகவும் ஆக்கிக் காட்டிய ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.**

---

முயலலாம். கண்டனமோ, பாராட்டோ, அவற்றைத் தாமே முற்பட்டுக்கூறாது பிற பாத்திரங்கள் வாயிலாகக் கூறச் செய்வது, கவிஞனின் முதிர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும் கட்டியம் கூறும். கவிஞனும் மனிதன்; அவனும் விருப்பு வெறுப்புக்கு ஆளாகலாம். அது அவன் படைப்பில் இடம் பெறாமல் இருத்தல் எங்ஙனம் இயலும்? என்பார் கூற்று ஏற்கத்தக்கது அன்று. தன்னையும் தன் உணர்வுகளையும் வெளிப்படுத்தாது கதை நடத்தும் ஆற்றலே கவிஞன் மேல் கற்பாருக்கு மதிப்பைச் சேர்க்கும்.

''தீண்டலும் உணர்ந்த அத் தெய்வக் கற்பினாள்'' என்று தொடங்கும் கவிச் சக்கரவர்த்திக் கம்பன், மந்தரையால் மனம் மாறிய கைகேயியை மன மாற்றத்திற்குப் பின்னும், ''தேவி'' என்று பாராட்டு மொழியாலேயே கதை நடத்துகின்றான்.



www.saivamonline.com

தயரதன் துயருக்கு அவள் காரணமானபோது, அவளை ஏச நினைத்தவன், இயற்கை நிகழ்வுகளின் வாயிலாக ஏச்சுரைக்கிறான். விழிப்பாகக் கதை நடத்தும் கவிஞன், கதைப் போக்கின் இடையே கைகேயி செயலைக் காண்டிக்கக் கவிக் கூற்று ஒன்றை அமைக்கின்றான். ஒரு பெண், தன் கணவனுக்கு இழைத்த கொடுமையே கதைப்போக்கு. கவிக் கூற்றால், அவளை ஏச்சுரைத்தல் கூட, அவ்வளவு நேரிதன்று. கவிஞன், மேலும் ஒரு படி போய் கைகேயிமேல் கொண்ட கோபத்தால் பெண் இனத்தையே சாடுகின்றான்.

> ''அஞ்சலள்; ஐயனது அல்லல் கண்டும்; உள்ளம்
> நஞ்சிலள்; நாண் இலள்; என்ன நாணம் ஆமால்
> ''வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றே
> தஞ்சு என மாதரை உள்ளலார்கள் தக்கோர்''

---

**இறைமை உணர்வைக் குருதியில் தேக்கிய தமிழ் மக்களுக்கு வழங்கும் காப்பியங்களில், கடவுளர்கள் பாத்திரங்களாக வந்தபோது, அவற்றின் குறைகளையும் குறித்துக்காட்டத் தமிழ்க் கவிஞர்கள் கொண்ட தயக்கம் பெரிது. ஒரு தவற்றைத் தவறு என்று சுட்டிக்காட்ட இயலாது போனது கூட வியப்பில்லை. அதனை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயமும் இங்கே கவிஞர்களுக்கு வந்து சேர்ந்தது.**

---

வஞ்சனையின் மறு வடிவம், பெண் என்பதால் அல்லவா மேலோர் பெண்களை மனத்தாலும் நினையாது வாழ்கின்றனர் என்கிறான் கவிஞன். ஒரு கைகேயின் குற்றத்திற்காகப் பெண் இனத்தையே குறைத்தல், நமக்கு வியப்பூட்டுகின்றது, சீதாபிராட்டியையும், மண்டோதரியையும், தாரையையும், பெண் குலத்துக் கற்புப் பெட்டகங்களாகச் சித்திரிக்க வேண்டிய கடமை உடையவன், பெண்மையைப் பற்றி இவ்வாறான ஒரு மதிப்பீடு கொண்டிருப்பது புதிராய் விரிகிறது.



www.saivamonline.com

உணர்ச்சிப் பிழம்பாய், விடுதலைக் கனல் கக்கிய அமரகவி, பாஞ்சாலி சபதத்தில் இடை புகுகின்றான். பாஞ்சாலி அடிமைப்பட்டு, துயர் உற்றது கண்டு கொதித்து எரியும் பாரதி, தம் கொதிப்பைத் தாமே வெளிப்படுத்தாது, வீமனைத் துணைக்கு அழைக்கின்றான். தருமன் மேல் கொண்ட கோபத்தை,

"இது பொறுப்ப தில்லை, தம்பீ
எரிதழல் கொண்டு வா,
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்"

என வீமன் வாக்காக வெளிப்படுத்துகின்றான். அதே அமரகவி, தருமன் சூதாட்டத்தில், தன் நாட்டைப் பணயமாக வைத்து ஆடித்தோற்றான் என்ற போது, வேறு பாத்திரத்தின் வாயிலாக அவன் செயலைக் கண்டிக்க முற்படாது,

---

**கதை நடத்தும் கவிஞன் பாத்திரங்களின் செயற்பாடுகளின் மேல், தான் ஒரு விமரிசகனாக நின்று தன் உணர்வை வெளிப்படுத்துவது சிறந்த கலை வடிவம் ஆகாது. ஏதேனும் ஒரு பாத்திரத்தின் செயற்பாட்டின் மேல் கவிஞனுக்கு ஒரு கருத்திருக்குமானால், அதனைக் காப்பியத்தில் வரும் ஏதேனும் உரிய ஒரு பாத்திரத்தின் வாயிலாக வெளிப்படுத்த அவன் முயலலாம்.**

---

"கோயிற் பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்றல்
போலும்,
வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலும்,
ஆயிரங்களான நீதி அவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் சிச்சீ சிறியர் செய்கை செய்தான்"

என்று வெகுண்டு பலபடப்பேசி நிறைவில்,

"ஊரை யாளும் முறைமை உலகில்
ஓர் புறத்தும் இல்லை



www.saivamonline.com

சாரமற்ற வார்த்தை மேலே
சரிதை சொல்லுகின்றோம்''.

என ஆதங்கப்படக்கூறி கதை நடத்துகின்றான். கவிஞன் காப்பியப்போக்கில் இடைபுகுந்து, தானே தன் கருத்தைத் தெரிவித்து விட்டால் அவன் படைத்த பாத்திரங்களின் குறை நிறைகளை மதிப்பிட்டு ஆய்வதற்கு அது பெருந்தடையாக அமைந்துவிடும். ஒரு பாத்திரம் வேறு ஒரு பாத்திரத்தைப் பாராட்டினாலோ, அன்றி இகழ்ந்தாலோ அதன் பின்புலத்தை ஆராய இயலும். கவிஞனே, அதைச் செய்யும் போது திறனாய்வாளர்கள் திகைக்க வேண்டி வருகிறது.

---

**வஞ்சனையின் மறு வடிவம் பெண் என்பதால் அல்லவா, மேலோர் பெண்களை மனத்தாலும் நினையாது வாழ்கின்றனர் என்கிறான் கவிஞன். ஒரு கைகேயி குற்றத்திற்காகப் பெண் இனத்தையே குறைத்தல் நமக்கு வியப்பூட்டுகின்றது. சீதா பிராட்டியையும், மண்டோதரியையும், தாரையையும், பெண் குலத்துக் கற்புப் பெட்டகங்களாகச் சித்திரிக்க வேண்டிய கடமை உடையவன் பெண்மை பற்றி இவ்வாறான ஒரு மதிப்பீடு கொண்டிருப்பது புதிராய் விரிகிறது.**

---

இந்திய நாடு தழுவிய இதிகாசங்களில் ஒன்று, வியாச மகரிஷியின் மகாபாரதம். இதனைத் தமிழில் வழங்கினார் வில்லிபுத்தூர் ஆழ்வார். வில்லிபாரதம், இன்று, தமிழில் நிலவும் பெருங்காப்பியங்களுள் ஒன்று. காப்பியக் கவிஞர்கள், தாம் கதைக் கரு தேர்ந்து கொண்டதற்குரிய காரணத்தை வெளிப்படுத்துவதும் உண்டு; கற்பார் கருத்துக்கே விட்டு விடுவதும் உண்டு. அறன் வலியுறுத்தத் திருவள்ளுவர் கவிதை செய்ததைப் பாயிரம் பேசுகின்றது. நெறி திறம்பிய ஆடவர் ஒழுக்கத்தை நிலை நிறுத்தக் கம்பன் கவிபாடினான் என்பது குறிப்பாலேயே உணர்த்தப்படுகிறது. அளவிலாத பெருமையராகிய சைவ அடியார்



www.saivamonline.com

புகழ் விரிப்பதைச் சேக்கிழார் காரணமாக்குகின்றார். வில்லியாரோ, வேதமுனி வரும், தேவரும், பிறரும் போற்றும் நூல் மகாபாரதம் என்பதற்காக நான் இதைப் பாடவரவில்லை என்கிறார். பின், பாடலுற்ற காரணம் என்ன? அவரே பேசுகிறார்.

''முன்னும் மாமறை முனிவரும், தேவரும், பிறரும்,
பன்னும் மாமொழிப் பாரதப்பெருமையும் பாரேன்;
மன்னும் மாதவன் சரிதமும் இடைஇடை வழங்கும்
என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன்''

---

**இராமனையும், தருமனையும், முருகப் பெருமானையும் நாம் ஆய்ந்து போற்றிய அளவு, இராவணனையும், துரியோதனனையும், சூரபதுமனையும் நாம் ஆராய்ந்தவர்கள் அல்லர்.**

---

கண்ணனின் பெருமைமிக்க வருகை, இக்கதையின் இடை இடையே வருவதனால்தான், நான் இம் மகாபாரத்தைத் தமிழில் பாட முன்வந்தேன் என வெளிப்படையாகவே வில்லி தம் நோக்கத்தைக் குறித்துக் காட்டுகின்றார். திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகக் குறிக்கப்படும் கிருஷ்ணாவதாரத்தில், கவிஞருக்கு இருந்த ஈடுபாடு மிகுதி. அவரோ பரம வைணவர். இந்த முன்னுரை, வில்லியாரின் காப்பிய அணுகுமுறை இப்படித்தான் இருக்கும் என்பதை உட்புகும் முன்னரே நாம் ஊகிக்க வழி காட்டுகிறது.

கடவுள் மானுடச் சட்டை தாங்கிக் கண்ணனாக வரும் கதையில், அவனைப் போற்றவும், வாழ்த்தவும் கவிஞர் முற்படுவார் என்பதில் வியப்பில்லை. அது மட்டும் அன்று; அவன் செயல்களையும், அவர் தெய்வீக அணுகுமுறையோடு பாராட்டவும், நியாயப்படுத்தவுமே செய்வார் என்பதும் புலனாகிறது. மற்றொன்றும் புரிகிறது; கண்ணனுக்கு வேண்டியவர்கள் கவிஞனுக்கு வேண்டியவர்கள். வேண்டாதவர்கள் அவருக்கும் வேண்டாதவர்கள். கண்ணன் துணை நின்ற, பாண்டவர்கள்பால் செலுத்திய அன்பைத் துரியோதனாதியர் மீது செலுத்த மாட்டார் என்பதும் எதிர்பார்க்கத் தக்கதாகவே அமைகிறது. இத்தகு காப்பியங்களில் வரும்



www.saivamonline.com

எதிர்முனைப் பாத்திரங்களைப் பரிவோடு அணுகி ஆய்வு செய்வது, பல உண்மைகளை வெளிப்படுத்த உதவியாக அமையும். இராமனையும், தருமனையும், முருகப்பெருமானையும் நாம் ஆய்ந்து போற்றிய அளவு, இராவணனையும், துரியோதனனையும், சூரபதுமனையும் நாம் ஆராய்ந்தவர்கள் அல்லர்.

''குணம்நாடிக், குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''

---

**எதிர்முனைப் பாத்திரங்கள் பற்றிய திறனாய்வின் நோக்கம் விருப்பு வெறுப்பற்றதாக எந்த ஓர் உள்நோக்கமும் இல்லாததாகவே அமைய வேண்டும். நல்லவர்களைத் தீயவர்களாகக் காட்டும் முயற்சியோ, தீயவர்களை நல்லவர்களாகக் காட்டும் முயற்சியோ ஆய்வாளனுக்கு இல்லை என்பதைப் பயில்வார் ஒவ்வொரு கட்டத்திலும் உணருமாறு செய்தல் இத்தகு திறனாய்வில் பெரிதும் அமைதல் வேண்டும். ஏன் என்றால் கால காலமாக நம்பப்பட்டு வந்த மக்களின் மனத்தடத்தில் இது ஒரு எதிர்நீச்சல் முயற்சியாகும்.**

---

என்ற வள்ளுவனை மேல் வரிச்சட்டமாக்கி, இத்தகு எதிர்முனைப் பாத்திரங்களையும் பரிவோடு நாம் அணுகினால், உன்னத உயர்பண்புகள் பல, இப்பாத்திரங்களின் பால் அமைந்து கிடப்பதைக் காண முடியும். இறைமை சார்ந்த கண்ணோட்டத்தைச் சற்றே ஒதுக்கிவைத்து விட்டு, நடுநிலை உணர்வோடு, வில்லிபடைத்த துரியோதனனின் குறை நிறைகளை மதிப்பிட்டுப் பார்க்கலாம்.

எதிர்முனைப் பாத்திரங்கள் பற்றிய திறனாய்வின் நோக்கம் விருப்பு வெறுப்பற்றதாக, எந்த ஒரு உள்நோக்கமும் இல்லாததாகவே அமைய வேண்டும். நல்லவர்களைத் தீயவர்களாகக் காட்டும் முயற்சியோ, தீயவர்களை நல்லவர்களாகக் காட்டும் முயற்சியோ ஆய்வாளனுக்கு இல்லை என்பதைப் பயில்வார் ஒவ்வொரு கட்டத்திலும் உணருமாறு செய்தல் இத்தகு



www.saivamonline.com

திறனாய்வில் பெரிதும் அமைதல் வேண்டும். ஏன் என்றால் கால காலமாக நம்பப்பட்டு வந்த மக்களின் மனத்தடத்தில் இது ஒரு எதிர்நீச்சல் முயற்சியாகும். இத்தகு முயற்சிகளில் அறிஞர்கள் குறைகாண்டல் அறம் அன்று. ஏன் எனில், இங்கே நன்மையில் நாம் தீமைகளைத் தேடிக்தொகுக்கவில்லை. தீமையில் நன்மையைத் தேடுகின்றோம். இத்தேட்டத்தின் நிறைவில் சில அரிய உண்மைகள் வெளிவரல் கூடும். அத்தீமை உண்மையிலேயே தீமைதானா? உண்மை எனில், அது தீமைப்பட்டது எதனால்? ஏன்? அத்தீமையின் ஊடே கல்லில் ஈரம் போல், பாறையில் ஒரு நீர் ஊற்றுப் போல் கொள்ளத்தக்க மானுடப் பண்புகள் ஏதேனும் உண்டா? இத்தகு முயற்சிகள் இவற்றுள் சிலவற்றை விடுவிக்கக் கூடும்.

---

**ஒரு மனிதன் மானுட சாதியில் தீயவனாக மாறினால், அவன் தீயவன் ஆனதற்கான சமூகக் காரணங்களை நாம் ஆராய வேண்டும். கெட்டவன் என்று நாம் கருதும் அவன் தரப்பு வாதங்களையும் சற்றே பரிவோடு கேட்க வேண்டும்.**

---

யார் இந்தத் துரியோதனன்? அவன் செய்த குற்றம் என்ன? பரிவோடு பார்க்கத் தொடங்குகின்றோம்.

''தீங்கு ஒரு வடிவமாக திறற் சுயோதனன்''

என வில்லிபுத்தூரார் துரியோதனனை நமக்கு அடையாளம் காட்டுகின்றார். ''இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை போல் துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்''எனக் கம்பன் காட்டுவது போல், தீமை ஓர் உருவம் கொண்டது போன்றவன் வலிய இத்துரியோதனன் என்கின்றார் வில்லி. அவர் துஷ்ட சதுஷ்டர்கள் என நான்கு கொடியவர்களைப் பட்டியல் இடுகிறார். அவர்களுள் முதல்வன் துரியோதனன், ஏனையோர் துச்சாதனன், சகுனி, கர்ணன் என்போர்.

காப்பியப் போக்கில் அழுக்காற்றின் மறு வடிவம் இத்துரியோதனன். இளமை முதலே பாண்டவர்களை அவன் பகைத்து வந்தான். ஆத்திரத்தில் வீமனைக் கொலை செய்யவும்



www.saivamonline.com

துணிந்தவன். நாடாளப் பாண்டவர்களுக்கு உரிமை இல்லை என்று அவன் நம்பினான். ஒரு சேர அவர்களைத் தீவைத்து எரிக்கவும் முயன்றான். தருமன் நிகழ்த்திய வேள்வியின் வெற்றியில் மனம் எரிந்தான். அவர்களை வஞ்சகமாகச் சூதுக்கு அழைத்து எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டான். சிரித்தாள் என்ற ஒரு தவறுக்காகச் சூதுக்கு அழைத்து கொழுந்தி என்றும் பாராது அவை நடுவே ஆடையைக் களையுமாறு உத்தரவிட்டான். பாண்டவர்களைக் காடேகச் செய்தான். காட்டிலும் பல இன்னல்களைத் திட்டமிட்டுப் பாண்டவர்களுக்கு விளைத்தான்.

---

**துரியோதனனிடம் காணப்பட்ட பொறாமைக்குணம் தாய் வழிச் சீதனம். காந்தாரியைக் குற்றவாளி ஆக்குவார் யார்? குந்தி ஒரு நொடியில் செய்த தவறு வாழ்நாள் எல்லாம் கர்ணனை வாட்டி வதைத்ததே அதுபோலவே காந்தாரியின் பொறாமை நெஞ்சம் துரியோதனனுக்குக் குருதி வழி பரிமாறப்பட்டது.**

---

மீண்ட போதும் நாடுதர மறுத்தான். தூது நடந்த கண்ணனைக் கொலை செய்யவும் முயன்றான். சிறிய தந்தை விதுரனை இகழ்ந்தான். தன் தந்தை சொல்வழி நிற்க மறுத்தான். உடன்பயில் தோழன் அசுவத்தாமனை ஐயுற்றான். போர் நெறி மாறி வஞ்சகம் செய்தான். இளம் பாலகனாம், அபிமனை வஞ்சகமாகச் சூழ்ந்து படுகொலை செய்தான். பிதாமகர் முதலிய மூத்தோர் சொல் மதியான். நிறைவில் பேரழிவைத் தானே தனக்குத் தேடிக் கொண்டு செத் தொழிந்தான்.

இத்தகைய குணக்கேடனைத் ‘‘தீங்கு ஒரு வடிவமாம் திறற் சுயோதனன்’’ என்று வில்லியார் அடையாளம் காட்டியதில் தவறு என்ன? இல்லைதான்.

ஆனால் ஒன்றை நாம் நின்று நிதானித்துச் சிந்தித்தாக வேண்டும். ஒரு மனிதன் மானுட சாதியில் தீயவனாக மாறினால், அவன் தீயவன் ஆனதற்கான சமூகக் காரணங்களை நாம் ஆராயவேண்டும். கெட்டவன் என்று நாம் கருதும் அவன் தரப்பு வாதங்களையும் சற்றே பரிவோடு கேட்க வேண்டும். கேட்டுப்பார்க்கலாம்.



www.saivamonline.com

அழுக்காற்றின் மறுவடிவம் இந்தத் துரியோதனன். பொறாமைக் குணம் சந்திரகுலத்து உதித்த மாமன்னன் மகனுக்கு வந்தது எவ்வாறு? மூலம் எங்கே? கானகத்தில் குந்தி தருமனைப் பெற்றெடுத்தாள் என்ற செய்தி கேட்ட தாய் காந்தாரி, பொறாமையால் கருவுற்ற தன் வயிற்றைக் கல்லால் குத்திக்கொண்டாள். சிதைந்த கரு காத்து உயிர்கொடுக்கப் பெற்ற போது துரியோதனன் பிறந்தான்.

''அருந்தவப் பயனால் மைந்தன்
பெற்றனள் குந்தி என்னும் பேர் உரை கேட்ட அன்றே
உற்றனள் பொறாமை; கல்லால் உதரம் உள் குழம்புமாறு
செற்றனள்; தனதுகேடும் ஆக்கமும் சிந்தியாதாள்''

---

**தாய்க்கு அறிவார்ந்த பிள்ளைகள் மேல் ஆசை அதிகம் என்றாலும், சவலைப் பிள்ளைகளின் மேல் அவள் கருணை குறைவதில்லை. தவறு நடந்தால் தயக்கத்தோடாவது அதனைக்குறித்துக் காட்ட அவள் தவறுவதில்லை. வில்லி இங்கே தாயாகிறார்.**

---

வில்லியின் வார்த்தைகளிலேயே பொறாமையின் மூலம் காந்தாரியிடம் தொடங்குவதைப் பார்க்கிறோம். துரியோதனனிடம் காணப்பட்ட பொறாமைக்குணம் தாய் வழிச் சீதனம். காந்தாரியைக் குற்றவாளி ஆக்குவார் யார்? குந்தி ஒரு நொடியில் செய்த தவறு வாழ்நாள் எல்லாம் கர்ணனை வாட்டி வதைத்ததே. அதுபோலவே காந்தாரியின் பொறாமை நெஞ்சம், துரியோதனனுக்குக் குருதி வழி பரிமாறப்பட்டது. மேலும், ''நாடு எல்லார்க்கும் பொது'', என்னும் சொல் பொறாத ஊக்கம் மன்னர்களுக்கு அலங்காரமாகவே கூறப்பட்டது.

குருநாட்டின் மரபுரிமை யாருக்குச் சொந்தம்? துரியன், தானே அதற்குரியவன் எனத் திடமாக நம்பினான். நேரடியாகக் கூற முடியாத உண்மைகளைக் கவிஞன் உவமை வாயிலாக வெளிப்படுத்துவது காப்பிய மரபுகளுள் ஒன்று. பாண்டவர்கள் ஐவரும், துரியோதனன் உள்ளிட்ட நூற்றுவரும், இளமையில் குருநாட்டில் வளர்ந்த திறம் கூற வந்த வில்லி,



www.saivamonline.com

"அனுசநிருபன் புதல்வர் ஐவரும் மகீபன்
தனயர் ஒரு நூற்றுவரும் அன்பினோடு தழுவிக்
கனகுலம் முகந்துபெய் கருங்கயம் நெருங்கும்
வனசமலரும் குமுதமலரும் எனவளர்வார்"

பாண்டவர்களைத் தாமரை மலர்களாகவும், கௌரவர்களை அல்லி மலர்களாகவும் புனைகிறார் கவிஞர். ஒன்று மலர்ந்தால் ஒன்று கூம்பும் என்ற குறிப்பு. ஒரு புறமாக, வேறொரு உட்குறிப்பும் பாடலில் அமைகிறது. தாமரை சூரியனைக் கண்டு மலர்வது. அல்லி சந்திரன் வர மலர்வது. குருகுலம் சந்திரனில் தொடங்கி வருவது. கௌரவர்களை அல்லி மலர்களாக உருவகிந்த கவிஞரின் உட்குறிப்பு, நாட்டாட்சிக்குச் சந்திர மரபில் வரும் துரியோதனாதியர்களே உரியவர்கள் என்பதை மறைமுகமாகக் குறிப்பிக்கிறது. இது வலிந்து தேடும் முயற்சி போல் தோன்றவில்லையா? நியாயமான வினா. இல்லை என்பதற்கு வேறு சான்றுகளும் உள்ளன.

---

**நட்பை நட்புக்காகவே செய்வது ஒரு வகை. நட்பை எதிர்பார்ப்புக்காகச் செய்வது வேறுவகை. முன்னது உன்னதமானது; பின்னது நட்பென்றே கூறப்படாது பழிக்கத்தக்கது. துரியன், கர்ணன் பால் கொண்ட நட்பு எவ்விதமான எதிர்பார்ப்புக்களும் கலவாத உயர் நலம் கொண்டது.**

---

விசித்திர வீரியன் மறைவுக்குப் பிறகு குருகுல மரபுப்படி மூத்தவனுக்கு உரியது அரசுரிமை என்று கருதிய பிதாமகன் பீஷ்மன், குருநாட்டின் மன்னனாக மூத்தவன் கண்ணிலா திருதராஷ்டிரனனை அரசனாக முடிசூட்டுகிறான். அதுமட்டுமல்ல. தம்பியர் இருவரில் பாண்டுவைச் சேனாதிபதியாக நியமிக்கின்றான். விதுரனை அமைச்சனாக்கி மகிழ்கின்றான்.

"ஆனதிக்கு இருநாலும்வந்து அடிதொழ
அம்பிகை மகன்தனை
வான்நதித் திருமகன், ஒரு தினத்தினில்
மங்கல முடி சூட்டிப்



www.saivamonline.com

பால்நிறத் திறல் பாண்டுவே சேனையின்பதி
முழுமதி மிக்க
கான்நிறத் தொடை விதுரனே அமைச்சன்
இக்காவலர்க்கு எனவைத்தான்''.

மாமன்னன் மகன் நான் இருக்க, சேனாதிபதியின் பிள்ளைகளாகிய பாண்டவர்கள், நாட்டில் பங்கு கேட்பதில் நியாயம் இல்லை என்பது துரியோதனன் தரப்பு வாதமாக அமைகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வடநாட்டுப் பொருள் நூல்களும் மூத்தவனுக்கே அரசு என்றும், அவன் வழி வந்தவர்களே அடுத்த பட்டத்துக்கு உரியவர்கள் என்றும் கூறுவது துரியோதனன் தரப்பு வாதத்திற்கு இசைவானதாக அமைகிறது.

---

**வீரம் வீரத்தால் அளவிடப்படாது குல ஆசாரத்தால் அளவிடப்பட்ட போது, ஏனையோர் எல்லாரும் வாய்மூடி மௌனியாக நிற்கின்றனர். துரியன் மட்டுமே முன் எழுந்து, சாதி பேதம் கற்பித்த ஆசாரியனுக்கு எதிராகக் கடும் குரல் கொடுக்கின்றான். பிதாமகரும், துரோணரும், விதுரரும் பேச வேண்டிய உயர் அறங்களைத் துரியோதனனைப் பேச வைத்து உயர்த்துகின்றார் வில்லி.**

---

என்றாலும், பாண்டவர்கள் தம் சிறிய தந்தை புதல்வர்கள் அல்லவா? அவர்களை ஏன் துரியோதனன் ஏற்றுப்போற்றல் கூடாது? என்ற நடுநிலை வினா எழவே செய்கிறது.

துரியனின் நிலை இங்கே சற்றுக் கடுமையாக அமைகிறது. பாண்டவர்களையும், ஏன் சிறியதந்தை விது ரனையும் கூட, பிறப்பு வகையால் அவன் இழிவாகக் கருதுகின்றான். அவர்கள் குருகுலத்தவர்கள் அல்லர் என்பது துரியன் தரப்பு வாதம். கடுமை போல் தோன்றுகின்றது. ஆயினும், இக்கடும் வாதத்தையும் வில்லியே துரியோதனன் கூற்றாகப் படைக்கிறார். கவிஞர் இதனைத் துரியோதனன் கூற்றாக எடுத்து இயம்பச் செய்தது அவர்



www.saivamonline.com

பக்தி உணர்விலும் மேம்பட்ட சத்தியதாகத்தின் விளைவா? வில்லி துரியோதனைப் பேச வைக்கிறார்.

''அன்னை யானவரும் இருவராம் முதல்
அளித்த தந்தையர்கள் ஐவராம்
பின்னை ஆசை கொடு குருகுலத்துரிமை
பெறுவராம் ஒருபிறப்பில் ஓர்
மின்னையாம் இவர்கள் ஐவரும்
பரிவினோடு தனித்தனி விரும்புவார்
என்னையாம் அவரொடு ஒரு குலத்தரசு
என்பதம்ம இவை என்கொலாம்''

---

**மனைவியை அயலான், கை தொட்டதைக் கண்டவன் நெஞ்சம் துடிக்கும். உடல் நடுங்கும்; கண் சாம்பும்; கைவிரல்கள் தளரும், கர்ணா இக்காட்சிக்கண்டு நான் நெஞ்சத்தில் பதட்டமே அடையவில்லை; ஒரு வேளை நீ நம்ப மறுத்தால் இதோ இங்கே சிதறிக்கிடக்கும் சிறுசிறு மணிகளைக் கண்சாம்பாது, ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துக் காட்டவா? மேலும், உன்னைத் தெளிவிக்க இம்மணிகளின் சிறு துளைகளில், இவ்வடத்தைக் கை நடுங்காது நுழைத்துக் கோக்கட்டுமா என்றான் துரியன்.**

---

குந்தியும் மாத்திரியும் மகப்பெற்ற முறையும், ஐவர் பாஞ்சாலியை மணந்த திறமும், குருகுல மரபுக்கு உகந்த இயல்புகள் அன்று என்பது துரியோதனன் எண்ணம் என்பது நன்கு புலப்படுகிறது. துரியோதனனின் இந்நிலைக்கு எதிர்த் தரப்பில் சரியான விளக்கம் தரப்படாதது நமக்கு வியப்பைத் தருகிறது. ஆத்திரப்படாது துரியோதனன் வாதத்தை அலசி ஆராய வேண்டுவது ஆய்வாளர் கடமை ஆகிவிடுகிறது.

பொறாமையால் இளமை முதலே பாண்டவர்களைப் பகைத்தான் துரியோதனன் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. வில்லி



www.saivamonline.com

ஏதும் குறிப்புத் தருகிறாரா? ஆம் தருகிறார். தொடக்கத்தில் வேற்றுமை சிறிது மின்றியே கௌரவர்களும் பாண்டவர்களும் பழகி வந்தனர் என்கிறார்.

> "பாந்தள் ஏறு உயர்த்த கோவும்
> நிகரிலாத் துணைவர் தாமும்
> நீரொடும் நீர் சேர்ந்தென்னத்
> தகைவிலா அன்பினோடும் தழுவினர்
> கெழுமி னோரே"

---

**தன்னை அவமதித்த பீஷ்மர் சாகும்வரை, போர்க்களம் வரமாட்டேன் என்ற கர்ணனை வற்புறுத்தாத பண்பு; போரில் அடுத்து அடுத்துத் தம்பியர்கள் சாக, துரியன் வில் எடுத்துப் போமாறு வேண்டியும் வ்ரமறுத்த கர்ணனிடம், வெகுண்டுரையாத சகிப்புத்தன்மை; கர்ணன் விருப்பத்திற்காகச் சல்லியனைத் தாழ்ந்து வேண்டித் தேரோட்ட இசைவு பெறும் சால்பு; கொடையின் பெயரால் தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டான் என்று எண்ணி ஒருபோதும் வெகுளாத பண்பு; கர்ணன் உயிர் துறந்தபோது இனியாரொடு மகிழ்ந்து நிலனாள்வேன், நண்பனே உன்னை நாடி நானும் இதோ வருகிறேன் என்று அரற்றும் கழிவிரக்கம்; இவை எல்லாம் ஒப்புமை காட்ட இயலாத உன்னத நட்புத்தடத்தில் துரியனை வெகுவாக உயர்த்திவிடுகின்றன.**

---

நீரும் நீரும் போல் பழகியவர்களிடையே பகைவிளைத்தவன் யார்? துரியனா? இல்லை; வீமன் தான் என்று வில்லி அடையாளம் காட்டும்போது நாம் வியந்து நிற்கிறோம். இங்கேயும் உண்மை கூற உவமை ஒன்றைக் கையாள்கிறார் வில்லி. மிக நுட்பமான



www.saivamonline.com

இடம் இது. வளர்ந்து குழந்தைகள் மாளிகையில் விளையாடும் போது வீமன் கருடனாகத் திகழ்ந்தான். துரியோதனாதியர்கள், நாகங்களாகத் திகழ்ந்தார்கள் என்கிறார்.

"எயில் நலம்புனை கோபுர மாபுரத்து
எழுது மாளிகை தோறும்
வெயில் நிலாவுமிழ் கனகநீள் வீதியில்
விலாச முற்றிடு நாளில்
பயினன் மேல்வரு கல்லெனச் செறிந்தமெய்ப்
பவனன் மைந்தனும்
வயினதேவனை காத்திரவேயரை மன்னர்
மைந்தரும் ஒத்தார்".

---

**தவறுகள் ஒருவனால் நினைவு கூரப்பெற்று, தன்னிலை இரக்கம் கொள்ள வைக்குமானால், அவன் குற்றங்கள் மன்னிக்கப்படலாம் என்பது வாழ்வியல் கோட்பாடு. வெற்றி பெறுவான் என நினைத்த பிள்ளை, வெற்றி பெற்ற போது மகிழ்வதைவிட, தோல்வி அடைவான் என நினைத்த பிள்ளை வெற்றியடையும்போது தாய் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. கவிஞனும், தீயன் என விலக்கிய பாத்திரத்தில், நன்மை காணும் போது இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டு அப்பாத்திரத்தைப் பலபடப் புகழ்கின்றான்.**

---

பவனன் மைந்தனாகிய வீமன், வயின தேவன் எனப்படும் கருடனாகவும், மன்னன் மைந்தராகிய நூற்றுவர் கந்தரு புதல்வர்களாகிய காத்திர வேயர் என்னும் நாகங்களாகவும், வில்லியால் குறிக்கப்படுவது ஆழ்ந்த நோக்குடையது. தன்னளவில் நஞ்சுடையது நாகமாயினும், அது சென்று கருடனைப் பகைப்பதில்லை. கருடனே, பாம்பைப் பகைக்கும் என உட்குறிப்பு வைத்து, பகை மூலம் வீமனே என்பதை உறுதி



www.saivamonline.com

செய்கிறார் கவிஞர். இதனை மேலும் வலியுறுத்துவாராய் வீமனைக் கூறவரும் இடத்து அவன்,

> "அந்நகர் உளார்கள் என்று
> ஓதிய சனங்களுக்கு உவகை நல்கினான்,
> ஞாதியர் கிளைக்கெலாம் நடுக்கம் நல்கியே"

என, துரியன் முதலாய கூட்டத்தார்க்கு வீமன் நடுக்கம் செய்தான் என்பதைக் குறிப்பிடுகிறார். துரியனின் பொறாமை உணர்வு, கொலைவெறியாக வளர்ந்ததற்கு வீமனும் ஒரு காரணம் என்பதைக் கவிஞர் நடுநிலை நின்று குறித்துக்காட்டி ஆச்சரியப் படுத்துகின்றார். தாய்க்கு, அறிவார்ந்த பிள்ளைகள் மேல் ஆசை அதிகம், என்றாலும், சவலைப் பிள்ளைகளின் மேல் அவள் கருணை குறைவதில்லை. தவறு நடந்தால், தயக்கத்தோடாவது அதனைக்குறித்துக் காட்ட அவள் தவறுவதில்லை. வில்லி இங்கே தாயாகிறார்.

---

**வெளியில் குத்தும் முள்களைக் கொண்ட பலாவை, பிளந்து, பிசின் நீக்கிச் சக்கைகளை அகற்றிப் பார்த்தால் உள்ளே மிக இனிய சுளை காணப்படுவதுபோல், துரியோதனன் என்ற எதிர்முனைப் பாத்திரத்தின் உள்ளே, நியாய உணர்வு கொண்ட இனிய இதயம் ஒன்று இருப்பதைக் காண முடிகிறது. நன்மையில் தீமை தேடுவதை விடுத்து, தீமையில் நன்மை தேடினால் இத்தகு இனிக்கும் வேர்ப்பலாக்களை நாம் இனங்கண்டு சுவைக்கலாம்.**

---

துரியன் தரப்பு வாதங்களை வில்லி காட்டிய அடையாளங்கள் வழி கண்ட நம் நெஞ்சம், அவனது உயர் குணங்களைத் தேடிக்காண விழைகிறது.

சங்க இலக்கியங்கள் தொடங்கி, வில்லியின் காலம் வரை, நட்பின் நிலைக்களங்கள் பலவற்றைத் தமிழ் இலக்கியங்கள் அழகுபடச் சித்திரித்து மகிழ்ந்தன. எந்த இரு ஆடவர்களுக்கும்



www.saivamonline.com

இடையிலும் காணமாட்டா ஒரு நட்புச் சித்திரிப்பைத் துரியன் கர்ணன் நட்பில்வைத்து வில்லி விளக்குகின்றார். வியப்பூட்டும் இவர்கள் நட்பில் கர்ணனை விடத் துரியனே முதலிடம் பெறுகின்றான்.

நட்பை நட்புக்காகவே செய்வது ஒரு வகை. நட்பை எதிர்பார்ப்புக்காகச் செய்வது வேறுவகை, முன்னது, உன்னதமானது; பின்னது, நட்பென்றே கூறப்படாது பழிக்கத்தக்கது. துரியன் கர்ணர் பால் கொண்ட நட்பு; எவ்விதமான எதிர்பார்ப்புக்களும் கலவாத உயர் நலம் கொண்டது என்பதை வில்லி குறிப்பிடுகிறார்.

தான் வெல்ல மாட்டாத அர்ச்சுனனை வெல்ல, கர்ணன் நட்பைத் துரியன் தேர்ந்தான் எனக் கூறல் கூடுமா? இடமே இல்லை. பகை முற்றாத இளமைக் காலத்திலேயே துரியன் கர்ணனை நண்பனாகக் கொண்டான் என்பதை வில்லி குறித்துக் காட்டுகின்றார்.

''ஆங்கவர் அம்முறை அயரும் ஆயிடைத்
தீங்கொரு வடிவமாம் திறற்சுயோதனன்
பாங்கிவன் நமக்கெனப் பரிதி மைந்தனை
வாங்குபு தழீஇனன் வலிமை கூரவே''

இளமையில் தொடங்கிய இவர்கள் நட்பு, உறுதிப்பட்ட காலம் அரங்கேற்றத்தில் அமைந்தது.

வில் பயிற்சியை நிறைவித்த குருகுலப் பிள்ளைகளுக்கு. அரங்கேற்றம் அமைக்கின்றனர் ஆசாரியப் பெருமக்கள். அனைவரையும் வென்று விளங்கும் அர்ச்சுனன், இறுதியில் தன் ஆண்மை பேசுகின்றான். கர்ணன், விசயனை விற்போருக்கு அழைக்கத் தன் நண்பன் ஆற்றல் கண்டு, துரியோதனன் அவனைத் தழுவிப் பாராட்டுகின்றான். விசயனும் கர்ணனும், ஒருவரை ஒருவர் வெகுண்டு உரைக்கின்றனர். கிருபன், இரு பெரு வீரர்களுக்குகிடையே நடைபெறும் வீரப் போட்டியாக இதனை ஏற்காது,

''சூதன்மைந்தன் வேலை ஏழும் சூழும் மேதினிக் கெலாம்
நாதன் மைந்தனுடன் வெகுண்டு நவிலுதற்கு நண்ணுமோ?''

என்று குல ஆசார தருமத்தை இடைப்புகுத்திக் கர்ணனை நாணுறச்



www.saivamonline.com

செய்கின்றான். வீரம் வீரத்தால் அளவிடப்படாது, குல ஆசாரத்தால் அளவிடப்பட்ட போது, ஏனையோர் எல்லாரும் வாய்மூடி மௌனியாக நிற்கின்றனர். துரியன் மட்டுமே முன் எழுந்து, சாதி பேதம் கற்பித்த ஆசாரியனுக்கு எதிராகக் கடும் குரல் கொடுக்கின்றான். பிதாமகரும், துரோணரும், விதுரரும் பேச வேண்டிய உயர் அறங்களைத் துரியோதனனைப் பேச வைத்து உயர்த்துகின்றார் வில்லி. துரியனின் பேச்சில் அறத்தின் சாயலும், நேர்மையின் ஆட்சியும், பொதிந்திருத்தல் அவன் உயர்வுக்குக் கட்டியம் கூறுவதாக அமைகிறது. துரியன் கொதித்து எழுகிறான்.

''கற்றவர்க்கும் நலம் நிறைந்த கன்னியர்க்கும் வன்மைகை
உற்றவர்க்கும் வீரர் என்று உயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கும் உண்மையான கோது இல் ஞானசரிதராம்
நற்றவர்க்கும் ஒன்று சாதி நன்மை தீமை இல்லையால்''

இந்த கோபத்துள்ளும் இப்படி ஒரு கனமா? இந்த ஆத்திரத்துள்ளும் இப்படி ஓர் அறமா என்று துரியன் பேச்சு அவனை நம் நெஞ்சில் உயர்த்தி வைக்கிறது. வெறும் பேச்சோடு நிற்கவில்லை துரியோதனன். அரங்கமே தன்னை வீரத்தால் எடை போடாது, பிறப்பால் தாழ்த்தியது கண்டு தலை குனிந்து நின்ற தன் உயிர் அனைய நண்பன் கர்ணன் தலையில், அங்க நாட்டின் முடியைக் கவிழ்க்கிறான் துரியோதனன். தன் அரியாசனத்தில் சரியாசனம் தருகிறான். அவை, துரியன் செயல் கண்டு வியக்கிறது. கர்ணன் துரியன் நட்பில் கரைகிறான். கற்போர் துரியனின் உயர் பண்பில் நெஞ்சைப் பறிகொடுக்கின்றனர். இவர்கள் இருவரும் இனிதிருந்த காட்சிக்கு வில்லி தரும் உவமை அழகு மிக்கது.

''தவனன் மைந்தனும் சுயோதனனும் இசைந்து தனதனும்
சிவனும் என்ன நட்பு கொண்டு திறலுடன் சிறந்துளார்''

கர்ணன் துரியோதனன் நட்பு, குபேரன் சிவபெருமான் நட்புப் போன்றது என்கிறார் வில்லியார். துரியனைச் சிவனோடு ஒப்பிடும் திறம், வில்லியே துரியன் பண்பில் உளம் நெகிழ்ந்தாரோ என எண்ண வைக்கிறது. கர்ணன், தனக்குச் சமூகப் பெருமிதம் தந்த துரியோதனனை நண்பனாக மட்டுமன்று, தனக்குத் தலைவனாகவே கருதுகின்றான். ஆனால், துரியனோ கர்ணனைத் தன்னால் வாழ்வு பெற்றவன் என்ற கருத்தே இல்லாது உயிர் நண்பனாகவே போற்றுகின்றான்.



www.saivamonline.com

துரியோதனின் நட்பின் அகலம்; அவன் கர்ணன் பால் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை முற்றாக வெளிவரும் இடம் ஒன்றை ஓர் இடத்தில் வில்லி பதிவு செய்து வியப்பூட்டுகின்றார்.

இராஜமாதா குந்தி கண்ணன் அறிவுறுத்த, கர்ணனே தன் முதல் மகன் என்பதை அறிந்து துடிக்கிறாள். கர்ணன் இருப்பிடம் சென்று தன்னைத் தாய் எனக் காட்டி, பாண்டவர்பால் திருப்புமாறு குந்தி வேண்டுகின்றாள். அவளுக்குக் கர்ணன் உரைத்த மறுமொழியில் துரியோதனனின் மகத்தான மனிதப் பண்புகள் அணிவகுக்கின்றன.

தாயே, என்பால் அன்பிலாமையோ, வரும் பழி நாணியோ என்னை ஆற்றில் விடுத்தீர். அன்று முதல் இன்று வரை அவன் என்னைத் தன் உயிர்த் துணையாகக் கொண்டான். மகுடம் புனைந்தான். அரசளித்தான். ஒருங்கிருந்து உண்டான். தன் தம்பியரையும், சுற்றத்தாரையும் என்னை வணங்குமாறு செய்தான். எனக்குத் தோற்றமும், ஏற்றமும் அளித்தான்.

வாழ்வு பெற்ற கர்ணனின் வஞ்சம் கலவாத வார்த்தைகளில், ''தீயோன்'' என்று சித்திரிக்கப்பட்டு வந்த துரியோதனன் நட்பில் புதுவரலாறு படைத்தவன் என்பது புலனாகக் காண்கின்றோம்.

கர்ணன் தாயிடம் உரைத்த ஓர் அரிய செய்தி துரியோதனனை நம் நெஞ்சபீடத்தில் மேலும் உயர்த்துகின்றது.

அம்மா, ஒருநாள் துரியன் அரண்மனையில் அவன் மனைவி பானுமதியோடு, தனித்திருந்து சூதாடி மகிழ்ந்தேன். துரியன் வரவு கண்டு அவள் எழுந்ததைத் தோல்விக்குத் துவண்டு எழுவதாகக் கருதித் தடுக்க முயன்றேன். என் கைபட்டு, அவள் இடையை அலங்கரித்த மேகலை அறுந்து மணிகள் நாலாபக்கமும் சிதறின. திகைத்த நான், துரியன் அருகில் வர அதிர்ந்து போனேன். பானுமதி திகைத்து நின்றாள். எல்லாரும் தடுமாறும் இந்தச் சூழலிலும், தான் சிறிதும் தடுமாறாத என் நண்பன், எங்கள் இருவரையும் நோக்கிச் சிதறிக்கிடக்கும் மணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுக்கட்டுமா? எடுத்த மணிகளை இச்சரட்டில் கோக்கட்டுமா, என்று கேட்டுச் சூழ்நிலையின் இறுக்கத்தைத் தணித்த மாபெரும் மனிதன். இத்தகு பண்பாளனுக்காகப் போர்க்களம் சென்று



www.saivamonline.com

செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே இனி வாழ்வில் எனக்குப் புகழ் தருமம் எல்லாம் என்றான்.

எத்தகு நல்லுள்ளம் படைத்தவரும் தடுமாறிப் போகும் இடத்திலும், அவள் என் மனைவி, அவளை நான் அறிவேன். அவன் என் நண்பன், அவன் பண்பு எனக்குத் தெரியும், தவறு நடக்கும் வாய்ப்பே இல்லை என்பதைத் திடமாக நம்புகின்ற ஒரு மாமனிதனை வில்லி இங்கே படைத்துக் காட்டித் துரியனை உயர்த்தி விடுகிறார்.

''எடுக்கவோ கோக்கவோ''

என்ற தொடர், ஆழ்ந்த அர்த்தம் கொண்டது. மனைவியை அயலான், கை தொட்டதைக் கண்டவன் நெஞ்சம் துடிக்கும். உடல் நடுக்கும். கண் சாம்பும். கைவிரல்கள் தளரும். கர்ணா, இக்காட்சிக் கண்டு நான் நெஞ்சத்தில் பதட்டமே அடையவில்லை; ஒரு வேளை நீ நம்ப மறுத்தால், இதோ இங்கே சிதறிக்கிடக்கும் சிறுசிறு மணிகளைக் கண்சாம்பாது, ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துக்காட்டவா? மேலும், உன்னைத் தெளிவிக்க இம்மணிகளின் சிறு துளைகளில், இவ்வடத்தைக் கை நடுங்காது நுழைத்துக் கோக்கட்டுமா என்றான் துரியன். நெஞ்சத்தை வார்த்தைகளால் மறைக்கும் கீழ்மை தனக்கு இல்லை என்பதை மெய்ப்பித்துக்காட்டும் துரியோதனைக் கொடியன் எனத் தூற்ற மறுத்து, நம் நெஞ்சம் மெல்ல மெல்ல அவன் பண்பில் கரைய அடம்பிடிக்கத் தொடங்குகின்றது.

நட்புத் தடத்தில் கைமாறு கருதாது கர்ணனை நேசித்த துரியன் திறம், போர்ச்சூழலிலும் வெளிப்படுகின்றது. தன்னை அவமதித்த பீஷ்மர் சாகும்வரை போர்க்களம் வரமாட்டேன் என்ற கர்ணனை வற்புறுத்தாத பண்பு; போரில் அடுத்தடுத்துத் தம்பியர்கள் சாக, துரியன் வில் எடுத்துப் பொர வேண்டியும், வரமறுத்த கர்ணனிடம் வெகுண்டுரையாத சகிப்புத் தன்மை; கர்ணன் விருப்பத்திற்காகச் சல்லியனைத் தாழ்ந்து வேண்டித் தேரோட்ட இசைவு பெறும் சால்பு; கொடையின் பெயரால் தன்னைப் பலவீனப்படுத்திக் கொண்டான் என்று எண்ணி ஒருபோதும் வெகுளாத பண்பு; கர்ணன் உயிர்துறந்த போது இனியாரொடு மகிழ்ந்து நிலனாள்வேன்; நண்பனே, உன்னை நாடி நானும் இதோ வருகிறேன் என்று அரற்றும் கழிவிரக்கம்; இவை



www.saivamonline.com

எல்லாம் ஒப்புமை காட்ட இயலாத உன்னத நட்புத்தடத்தில் துரியனை வெகுவாக உயர்த்திவிடுகின்றன.

''அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு''

என்பார் வள்ளுவர். ''வணங்காமுடி மன்னன்'' எனப்போற்றப் பெற்ற துரியோதனனிடம் இருந்த அஞ்சாமை, பெருமிதம் தருவதாக அமைகிறது. தூதுவந்த கண்ணனை, நிலவறையில் வீழ்த்திக் கொல்ல முயல்கின்றான் துரியன். கண்ணன் விசுவரூபம் கொண்டு, எதிர்த்தோரைச் சின்னா பின்னப் படுத்துகின்றான். கங்கை மகன், கதிரோன் மகன், அம்பிகை காதல் மகன் என்று, அவையில் இருந்த அத்தனை பேரும் எழுந்து வணங்கி ''எங்கள் பிழைப்பினை இன்று பொறுத்தருள்'' என்று பணிந்தனர். அப்போது கூட துரியோதனன் சிறிதும் நடுங்காதவனாய் இருந்த திறத்தை.

''பின்னையும் அஞ்சி அயர்ந்திலன் நெஞ்சு
பெயர்ந்திலன் ஆசனமும்
சென்னியிலும் கரம் வைத்திலன் வண்புகழ்
சிறிதும் மொழிந்திலனே''

எனக் கூறி, வில்லியே வியக்கிறார். ஒன்றை ஆய்ந்து, ஒரு முடிபுக்கு வந்தபின், செயற்களத்தில் விளைவுகளைக் கண்டு அஞ்சுதல் கீழ்மை என்று கருதிய துரியனின் மனத்திண்மை, அவனை நம் நெஞ்சில் மேலும் ஒருபடி உயர்த்துகின்றது.

வீரத்திலும் மேம்பட்ட மான உணர்ச்சியில் தலை நின்றவன் துரியோதனன் என்பதை, வில்லி பதினெட்டாம் போர்ச் சருக்கத்தில் விளக்கிக்காட்டுகின்றார். சமந்த பஞ்சகத்தில் கண்ணன் போர் குறிக்க, அவ்விடம் நோக்கித் தனியனாய் வருகின்றான் துரியன். அவன் நிலை கண்டு இரங்கிய தருமன், கண்ணபிரானைச் சத்திய சாட்சியாக்கி நாட்டை உனக்கே தருகிறேன். நாங்கள், உன் குற்றேவல் செய்கிறோம். வா, நாட்டாட்சி ஏற்றுக்கொள், என்று கெஞ்சுகிறான். அப்பொழுது துரியன் பேசிய பேச்சில் அவன் மானஉணர்வு பளிச்சிடுகின்றது.

தருமா, என் உறவினர்களும் தம்பிமார்களும் என் பொருட்டால் செத்தொழிந்தனர். இந்த நிலையில் உன் அருள்பெற்று உயிர் வாழ மாட்டேன், அவ்வாறு வாழ்வதைவிட என் உடல் பகுதிகள் துண்டுபட, அவற்றில் இருந்து குருதி



www.saivamonline.com

பெருக்கெடுக்க, என் உடல் பகுதிகளைக் கழுகும், காக்கையும் கொத்தச் சாவதையே பெரிதாகக் கருதுவேன் என்று பதில் உரைக்கின்றான்.

''என்கிளைஞர் என்துணைவர் என்பொருட்டால் இறந்தேக
உங்கள் அருள் பெற்றிருக்கும் உயிர்வாழ்வின் இனிதன்றோ
அங்கமெலாம் வேறுபட ஆறுபடு குருதியின் வாய்க்
கங்கமும் காகமும் கொத்தக் களத்தவிந்தான் எனும்பெயரே''

யாரை இழந்தால் என்ன, நாடு கிடைத்தால் போதுமென்று கருதும் கீழ்மை, துரியனிடம் இல்லை என்பதைக் கவிஞன் அற்புதமாய்ப் படம் பிடிக்கின்றான்.

வீமனொடு சமந்த பஞ்சகத்தில் நிகழ்ந்த போரில், துரியன் வீழ்ந்து குற்றுயிராய்க் கிடக்கிறான். அவனைக் கண்டு, பாண்டவர்பால் பெருஞ்சினங்கொண்ட அசுவத்தாமன், ''பாண்டவர்களைக் கொல்வேன்'' என்று இரவில் பாண்டவர் பாசறையுள் புகுந்து, பாண்டவர் எனத் தவறுபடக்கருதி இளம்பஞ்சபாண்டவர் தலைகளைக் கொய்து வந்து துரியன் முன் வைக்கிறான். சாவின் விளிம்பில் நிற்கும் துரியன், பாண்டவர்களைக் கொல்ல முடியாத நிலையில் அவர்தம் குழந்தைகளைக் கொன்று வஞ்சம் தீர்க்க உதவினான் நண்பன் என்று மகிழ்ந்திருக்கலாம். ஆனால் துரியன் மனப்பண்பில் தெய்விகம் நிழலாடுகின்றது. அசுவத்தாமனை வெகுண்டு,

''பாதகம் செய்தல் பார்ப்பனமாக்களுக்கு
ஏதம் ஏதம் இது என்செய்தவாறு அரோ''

என்று பரிகசிக்கின்றான். குருகுலத்தில், எனக்கும் பாண்டவர்களுக்கும் உண்டு இல்லை என்னும் பகை உண்டு. ஆனால், அதற்காகக் குருகுலத்தின் கால் முளைகளாக விளங்கும், இச்சிறுவர்களைக் கொல்ல நீதி ஏதும் இல்லை. ஐயகோ, தவறு இழைத்து விட்டாய்,

''இரு குலத்தில் எமக்கும் அவர்க்கும் இங்கு
ஒரு குலத்தினும் உண்டு என இல்லையால்
குரு குலத்தின் கொழுந்தினைக் கிள்ளினை
வரு குலத்தொரு மாசறு மைந்தனே''

என்னும் துரியனின் பேச்சில் இழையோடும் சோகத்தில் அவன் நெஞ்சத்தின் ஈரம் புலப்படுகிறது.



www.saivamonline.com

நிறைவாகத் துரியன் தன்னைத் தானே தற்சோதனை செய்து கொள்கின்றான். இளமையில் ஆற்றில் நீர் விளையாட்டு ஆடிய காலம் முதல், வீமன் முதலியோர்க்கு எத்தனை எத்தனைத் தீங்கிழைத்தேன். நன்கு ஆராய்ந்தால் இச்சாவு பாண்டவரால் வந்ததன்று என்பது புலனாகும். இச்சாவு, என் தீவினைகள் எனக்குத் தந்த பரிசு. எனவே, இதற்குப் பிறரை வெகுள்வதில் நியாமில்லை என்கிறான். தவறுகள் ஒருவனால் நினைவு கூரப்பெற்று, தன்னிலை இரக்கம் கொள்ள வைக்குமானால், அவன் குற்றங்கள் மன்னிக்கப்படலாம் என்பது வாழ்வியல் கோட்பாடு, இந்தத் தற்சோதனையில் துரியனின் மனவளர்ச்சிப் பேருருவமாகப் புலப்படுகின்றது.

''ஆற்றின் நீர்விளை யாடிய நாள் முதல்
காற்றின் மைந்தனொடு எத்தனை கன்றினேன்
சாற்றின் என்வினைதான் என்னையே சுட
கூற்றின் வாய்புகுந்தேற்கு என்ன கூற்று ஐயா''

புறமெல்லாம் முள்ளாகத் தோன்றிய பழத்துக்குள் இப்படி ஒரு ஈரக்கசிவா என நாம் வியக்கின்றோம்.

கடைசியில் தன்னைக் காணவந்த சஞ்சயனிடம் துரியன், தன் தந்தைக்குச் செய்தி சொல்லி அனுப்புகின்றான். மிக உருக்கமான வார்த்தைகள்; வளர்ந்த முதிர்ச்சி பெற்ற மனநிலை.

''யானும் எம்பியரும் இறந்தோம் எனும்
மான பங்கயம் மறந்து தன்நெஞ்சினுக்கு
ஆனதம்பி அளித்தவர் தம்மொடும்
கோன் நிலம் புரக்கும்படிக் கூறுவாய்''

ஈரக்கசிவின் உள்ளே ஒரு இனிமை காணப்படுவது போல், துரியன் மன வளர்ச்சியில் நெஞ்சைப் பறிகொடுக்கிறோம்.

துரியன் சாக்காட்டைக் கூற வந்த கவிஞன், பாத்திரத்தின் பழைய குற்றங்களை எல்லாம் மறந்தவராய்,

''உன்னில் ஆண்மைக்கு உவமையில் லாதவன்
பொன்னிலத்தின் உணர்வொடும் போயினான்''.

எனப் பாராட்டி அவன் ''பொன்னிலம் புகுந்தான்'' எனப் புகழ் பாடுகின்றார். ''உன்னில் ஆண்மைக்கு உவமை இல்லாதவன்''என அவன் ஆண்மையைப் புகழும் வில்லி,

''வயிரம் செறிதரு மனனும், வாய்மையும்
வலியும் பொருபடை வினையின் மேல்வரு



www.saivamonline.com

செயிரும் திகழ் குருகுல மகீபதி
திறல்வெஞ் செருமுனை அதனில் மேதகும்
அயிர்நுண் குழல் அரமட நல்லார் பலர்
அளிகொண்டு எதிர்கொள அமரன் ஆனபின்
உயிர்கொண்டது சுரர்உறையும் வானுலகு
உடல் கொண்டது தனதுடைய பூமியே''

என அவன் குண நலன்களைப் பலபடப் பாராட்டி அவன் அமரனானான். அவன் உயிர் தேவர் உலகு புக்கது எனக் காப்பியத்தை நிறைவிக்கிறார்.

வில்லிபுத்தூரார், தான் போற்றி வணங்கப் புகுந்த கண்ணனின் அன்புக்கு உரிய பாண்டவர்களொடு, மாறுபட்ட துரியனைப் பலபடக் குறைத்து மதிப்பிட முயன்றாலும், அவன் உயர் ப்ண்புகளில் நெஞ்சிழக்கும் போது தன்னை மறந்து பாராட்டவே செய்கிறார். வெற்றி பெறுவான் என நினைத்த பிள்ளை, வெற்றி பெற்ற போது மகிழ்வதைவிட, தோல்வி அடைவான் என நினைத்த பிள்ளை வெற்றியடையும் போது தாய் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. கவிஞனும், தீயன் என விலக்கிய பாத்திரத்தில் நன்மை காணும் போது இரட்டிப்பு மகிழ்ச்சி கொண்டு அப்பாத்திரத்தைப் பலபடப் புகழ்கின்றான்.

வில்லியின் படப்பிடிப்பில், வெளிப்பார்வைக்குப் பொறாமைக்காரனாகவும், வஞ்சகனாகவும் தோன்றும் துரியோதனன், உள்ளார்ந்த நட்பின் வளத்தில், மான உணர்வில், அஞ்சாமைத் திறத்தில், கீழ்மை கண்டு கொதிக்கும் பண்பில் ஓர் உன்னத மனிதனாக, உயர் குணத்தலைவனாகத் திகழ்கின்றான். வெளியில் குத்தும் முள்களைக் கொண்ட பலாவைப் பிளந்து, பிசின் நீக்கிச் சக்கைகளை அகற்றிப் பார்த்தால் உள்ளே மிக இனிய சுளை காணப்படுவதுபோல், துரியோதனன் என்ற எதிர்முனைப் பாத்திரத்தின் உள்ளே, நியாய உணர்வு கொண்ட இனிய இதயம் ஒன்று இருப்பதைக் காண முடிகிறது. நன்மையில் தீமை தேடுவதை விடுத்துத் தீமையில் நன்மை தேடினால் இத்தகு இனிக்கும் வேர்ப்பலாக்களை நாம் இனங்கண்டு சுவைக்கலாம். வில்லியின் வேர்ப்பலா, நம் உணர்வில் வெகு காலம் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.தமிழ்தந்த வில்லியை வாழ்த்துவோம்; வாழ்வோம்.

www.saivamonline.com